**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 349** **நாள்: 29.10.2025**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் (Special Intensive Revision) தொடர்பாக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரமுகர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் **சிறப்பு தீவிரத் திருத்தம் (Special Intensive Revision)** தொடர்பாக அனைத்து **அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரமுகர்களுடனான ஆலோசனைக் கூட்டம்** இன்று **(29.10.2025)** ரிப்பன் கட்டடக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., (இணை ஆணையாளர் (கல்வி), திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., (சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர்), திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., (துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி), திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (துணை ஆணையாளர் (பணிகள்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டார துணை ஆணையாளர்), திரு.அ.ஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு வட்டார துணை ஆணையாளர்), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) திரு.கு. சரவணமூர்த்தி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வாக்காளர் பதிவு அலுவலர்கள்/உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950 மற்றும் 1951, வாக்காளர் பதிவு விதிகள் 1960, தேர்தல் நடத்துதல் விதிகள் 1961, உச்சநீதிமன்ற தீர்ப்புகள், இந்திய தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கான வலுவான மற்றும் வெளிப்படையான சட்ட கட்டமைப்பை நிறுவுவது குறித்தும், இந்திய தேர்தல் ஆணையத்தின் தூய்மையான வாக்காளர் பட்டியல்கள் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட உள்ள சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision) குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில். சிறப்பு தீவிரத் திருத்தமானது 1951 முதல் 2004 வரை மொத்தம் 8 முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், கடைசியாக 2002-2004 காலக்கட்டத்தில் அதாவது 21 ஆண்டுகளுக்கு முன்பு சிறப்பு தீவிரத் திருத்தம் நடைபெற்றுள்ளது என்றும், இச்சிறப்பு தீவிரத்

திருத்தத்தின் முக்கிய செயல்முறைகள், முக்கிய நடைமுறைகள் மற்றும் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட கால அட்டவணை ஆகியவற்றை குறித்தும் விரிவாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் விவரிக்கப்பட்டது.

சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிகளுக்கான கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| வ. எண் | கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / பொறுப்பு அலுவலர் | எண் மற்றும் சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|
| 1. | கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) | எண்.16, எழும்பூர் |
| | | எண்.17, இராயபுரம் |
| 2. | கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) | எண்.22, விருகம்பாக்கம் |
| | | எண். 24, தியாகராய நகர் |
| 3. | கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் | எண். 18, துறைமுகம் |
| | | எண்.25, மயிலாப்பூர் |
| 4. | கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (சுகாதாரம்) | எண். 14, வில்லிவாக்கம் |
| | | எண்.21, அண்ணாநகர் |
| 5. | கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/துணை ஆணையாளர் (பணிகள்) | எண்.15, திரு.வி.க.நகர் |
| | | எண்.13, கொளத்தூர் |
| 6. | கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/வடக்கு வட்டார துணை ஆணையாளர் | எண்.11, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| | | எண்.12, பெரம்பூர் |
| 7. | கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/தெற்கு வட்டார துணை ஆணையாளர் | எண்.23, சைதாப்பேட்டை |
| | | எண்.26, வேளச்சேரி |
| 8. | கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/மத்திய வட்டார துணை ஆணையாளர் | எண்.19, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி |
| | | எண்.20 ஆயிரம் விளக்கு |

**சிறப்பு தீவிர திருத்தத்தின் முக்கிய செயல்முறைகள்**

**வாக்காளர் பதிவு அலுவலர்கள் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களின் பணி:**

- அக்டோபர் 27, 2025 தேதியன்று வாக்காளராக பதிவுசெய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்காளருக்கும் தனித்துவமான கணக்கெடுப்பு படிவங்கள் அச்சிடுதல்.

- இந்த கணக்கெடுப்பு படிவங்கள் தற்போதைய வாக்காளர் பட்டியலில் உள்ள தேவையான விவரங்களை கொண்டிருக்கும்.

**வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் பணி:**

- ஒவ்வொரு தற்போதைய வாக்காளருக்கும் கணக்கெடுப்பு படிவங்களை வழங்குதல்.
- வாக்காளர் அல்லது அவர்களின் உறவினரின் பெயரை 2002-2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற கடைசி சிறப்பு தீவிர திருத்தப் பட்டியலில் உள்ள பெயருடன் இணைத்து சரிபார்க்க உதவுவது.
- இந்த பணிக்காக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் வாக்காளர்களும் முந்தைய சிறப்பு தீவிரத் திருத்த தரவினை பெறுவதற்கு இந்திய தேர்தல் ஆணைய தரவுத்தளத்தினை (https://voters.eci.gov.in/) அணுகலாம்.
- புதிய வாக்காளர்களை சேர்க்க படிவம் 6 மற்றும் உறுதிமொழிப் படிவத்தை (Declaration Form) பெற்றுக் கொண்டு, அவர்களின் பெயரை பொருத்தம்/இணைப்பு (Matching/Linking) செய்வதில் உதவுவர்.
- வாக்காளர் கணக்கெடுப்பு படிவத்தினை நிரப்ப உதவுவர், மேலும் அப்படிவத்தினைச் சேகரித்து வாக்காளர் பதிவு அலுவலர்/உதவி வாக்காளர் பதிவு அலுவலருக்கு சமர்ப்பிப்பர்.
- ஒவ்வொரு வாக்காளரின் வீட்டிற்கும் குறைந்தது மூன்று முறை சென்று சரிபார்ப்பர்.
- இறந்தவர்கள், நிரந்தரமாக இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பதிவு செய்தவர்கள் ஆகியோரைக் கண்டறிவர்.
- வாக்காளர்கள் குறிப்பாக, நகர்புற வாக்காளர்கள் அல்லது தற்காலிக இடம் பெயர்ந்தவர்கள் இணையதளம் மூலமாகவும் கணக்கெடுப்பு படிவத்தை நிரப்பலாம்.
- கணக்கெடுப்பு படிவம் தவிர, எந்தவொரு பிற ஆவணங்களும் கணக்கெடுப்பு காலத்தில் சேகரிக்கப்பட தேவையில்லை.

**<u>வாக்காளர் பதிவு அலுவலர்கள் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களின் பணி :</u>**

- கணக்கெடுப்பு படிவங்கள் பெறப்பட்ட அனைத்து வாக்காளர்களின் பெயர்களையும் வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது.
- கடந்த சிறப்பு தீவிர திருத்தப் பட்டியலில் பெயர் பொருந்தாத / இணைக்கப்படாத வாக்காளர்களுக்கு அறிவிப்புகள் வழங்குவது.
- அவ்வாறு அறிவிப்பு வழங்கிய இனங்களுக்கு தகுதியின் அடிப்படையில் விசாரித்து, அவர்களின் பெயரை இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது அல்லது நீக்கம் செய்வது குறித்து முடிவு செய்வது.

**<u>வாக்காளர் பதிவு அலுவலர்கள் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் உறுதிப்படுத்த வேண்டியது:</u>**

- எந்த தகுதியான குடிமகனும் தவறவிடப்படக்கூடாது.
- எந்தத் தகுதி அற்ற நபரும் சேர்க்கப்படக்கூடாது.

**சிறப்பு தீவிர திருத்தத்தின் முக்கிய படிநிலைகள்**

**<u>கணக்கெடுப்பு முன் கட்டம் *(Pre-Enumeration Phase):*</u>**

- வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கப்படும்.
- வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர் விவரங்களை முந்தைய சிறப்பு தீவிர திருத்த பட்டியலில் உள்ள விவரங்களுடன் பொருத்தம் / இணைப்பு செய்வர்.
- *ECINET* மூலம் முந்தைய *SIR* உடன் கணினி வழி பொருத்தம் / இணைப்பு *(Computer Matching/Linking)* செய்யப்படும்.

**<u>அரசியல் கட்சிகளின் பங்கேற்றல்:</u>**

- தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர்கள் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளையும் சந்தித்து, சிறப்பு தீவிர திருத்த செயல்முறையை விரிவாக விளக்குவார்கள்.
- அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் நியமிக்கும் வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.
- வாக்குச்சாவடி நிலை முகவர்கள் வாக்காளர்களிடமிருந்து முறையாக நிரப்பப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை தினமும் சேகரித்து, ஒருநாளைக்கு அதிகபட்சம் *50* படிவங்கள் வரை சான்றளித்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு சமர்ப்பிக்கலாம்.

**<u>கணக்கெடுப்பு கட்டம் *(Enumeration Phase):*</u>**

- கணக்கெடுப்பு படிவங்களை அச்சிடுதல், விநியோகித்தல், வாக்காளர் விவரங்களை பொருத்தம்/இணைப்பு செய்தல் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை சேகரித்தல்.
- ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் அதிகபட்சம் *1,200* வாக்காளர்கள் மட்டுமே இருப்பதை உறுதி செய்வதற்காக வாக்குச்சாவடிகளை மறுசீரமைத்தல்.

**<u>வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு *(Publication of Draft Electoral Rolls):*</u>**

- கணக்கெடுப்பு படிவங்கள் பெறப்பட்ட அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் வரைவு வாக்காளர் பட்டியலில் *(Draft Rolls)* சேர்க்கப்படும்.

- இருப்பிடத்தில் இல்லாதவர்கள் / இடம் பெயர்ந்தவர்கள்/ இறந்தவர்கள் / இருமுறை பதிவு செய்யப்பட்டவர்கள் ஆகியோரின் பெயர்கள் வரைவு பட்டியலில் இடம்பெறாது; அந்த விவரங்கள் தலைமைத் தேர்தல் அதிகாரி இணையதளத்தில் மற்றும் அரசு அலுவலகங்களில் வெளியிடப்படும்.

- வரைவு வாக்காளர் பட்டியல் அறிவிப்பை *(Form-5)* வெளியிடும் போது வாக்காளர் பதிவிற்கு, அடுத்த தகுதி ஏற்படுத்தும் நாட்களான ஏப்ரல் *01*, ஜூலை *01* மற்றும்

அக்டோபர் *01 , 2026*-க்கு முன்கூட்டிய விண்ணப்பங்களையும் வாக்காளர் பதிவு அலுவலர் பெறலாம்.

**<u>அறிவிப்புகள் வழங்குதல் மற்றும் முடிவெடுத்தல் *(Issuance of Notices and Decision)*:</u>**

- கடந்த சிறப்பு தீவிர திருத்த பட்டியலில் பெயர் பொருந்தாத அல்லது இணைக்கப்படாத வாக்காளர்களுக்கு அறிவிப்புகள் வழங்கப்படும்.
- அவர்கள் வாக்காளர் தகுதியை உறுதிப்படுத்த அளிக்கும் சான்றுகள் மற்றும் ஆவணங்கள் ஆய்வு செய்யப்படும்.
- கடந்த சிறப்பு தீவிர திருத்ததிற்கு முன் அவர்கள் எங்கு இருந்தார்கள் என்பதைக் கண்டறிய விசாரணை நடத்தப்படும்.

**<u>உரிமைக்கோரல்கள் மற்றும் மறுப்புரைகள் *(Claims & Objections)*:</u>**

- வாக்காளர் பதிவு அலுவலர்கள்/ உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் வாக்காளர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அளிக்கும் உரிமைகோரல் மற்றும் மறுப்புரைகளை பெற்று அவைகளின் மீது முடிவெடுப்பர்.

**<u>இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு *(Publication of Final Electoral Rolls)*:</u>**

- வாக்காளர் பதிவு அலுவலரின் முடிவின் மீதான முதல் மேல்முறையீட்டை மாவட்ட தேர்தல் அதிகாரி / மாவட்ட நிர்வாக நடுவர் தீர்மானிப்பார், மாவட்டத் தேர்தல் அதிகாரியின் முடிவின் மீதான இரண்டாம் மேல்முறையீட்டை தலைமைத் தேர்தல் அதிகாரி தீர்மானிப்பார்.

**<u>தன்னார்வலர்களின் நியமனம்</u>**

- தன்னார்வலர்கள் நியமிக்கப்படுவது, தகுதிபெற்ற **வாக்காளர்கள்**, குறிப்பாக முதியோர்கள், **நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள் *(PwD)*, வறியவர்கள் மற்றும் பிற பாதிக்கப்படும் குழுக்களை சார்ந்தவர்கள்** எந்தவிதமான சிரமங்களும் எதிர்கொள்ளாமல், அவர்களுக்கு தேவையான **அதிகபட்ச உதவிகள் மற்றும் வசதிகள் வழங்கப்படுவதற்காக** ஆகும்.

**<u>வாக்குச்சாவடிகளின் மறுசீரமைப்பு</u>**

- எந்த வாக்குச்சாவடியிலும் *1,200* வாக்காளர்களுக்கு மேல் இருக்கக் கூடாது.
- அடுக்கு மாடி குடியிருப்புகள், குடியிருப்பு நலச் சங்கங்கள் உள்ளிட்ட இடங்களில் புதிய வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட வேண்டும்.

- புதிய வாக்குச்சாவடிகள் குறித்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்த வேண்டும்.
- ஒரே குடும்பத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் ஒரே வாக்குச்சாவடியில் சேர்க்கப்படுவதை உறுதிசெய்ய சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**<u>சிறப்பு தீவிர திருத்தம் (SIR) கீழ்கண்ட கால அட்டவணையின்படி நடைபெற உள்ளது</u>**

| வரிசை எண் | குறிப்புரை | தேதி |
|---|---|---|
| 1. | படிவங்கள் அச்சிடுதல் /பயிற்சி: | அக்டோபர் 28 முதல் நவம்பர் 03, 2025 வரை |
| 2. | வீடு தோறும் எண்ணிக்கை கட்டம் | நவம்பர் 4 முதல் டிசம்பர் 4, 2025 வரை |
| 3. | வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு | டிசம்பர் 9, 2025 |
| 4. | உரிமைகோரல்கள் மற்றும் மறுப்புரைகள் பெறும் காலம் | டிசம்பர் 9, 2025 முதல் ஜனவரி 8, 2026 வரை |
| 5. | அறிவிப்பு கட்டம் (விசாரணை மற்றும் சரிபார்ப்பு) | அறிவிப்பு கட்டம் (விசாரணை மற்றும் சரிபார்ப்பு) |
| 6. | இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு | பிப்ரவரி 7, 2026 |

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் /மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**